TNRM050004432021



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**

**முன்னிலை:திரு.S.B.சுஜித், B.A.B.L(Hons).,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 07–ம் நாள் சனிக்கிழமை

<u>பட்டிகை வழக்கு எண்.123/2021</u>

(CNR.NO:TNRM05-000443-2021)

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>மண்டபம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.154/2019 |

**எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | மணிகண்டன் |
| 3. | த/பெ | : | பெரியசாமி |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | எண்.10/27, சொக்கநாதபுரம், 2 வது தெரு, மதுரை. |
| 6. | வயது | : | 40/2019 |

| | | | |
|---|---|---|---|
| 7. | சம்பவ நாள் | : | 22.09.2019–ம் தேதி 10.45 மணி |
| 8. | புகார் தேதி | : | 22.09.2019–ம் தேதி 12.30 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 22.09.2019 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 22.09.2019 ம் தேதி நிலையப் பிணையில் சென்றுள்ளார். |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 06.09.2021 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 28.10.2021 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 24.11.2025 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | பிரிவுகள். 279, 337, 304(A) இதச படி |

| | | | |
|---|---|---|---|
| 15. | வினவப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | பிரிவுகள். 279, 337, 304(A) இதச படி |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | முதல் விசாரணை / எதிரி தரப்பு குறுக்கு விசாரணை<br><br>அ.சா.1 – 29.09.2022 / அ.சா.1 – 29.09.2022<br>அ.சா.2– 29.09.2022 / அ.சா.2– 29.09.2022<br>அ.சா.3– 29.09.2022 / அ.சா.3– 29.09.2022<br>அ.சா.4 – 29.09.2022 / அ.சா.4 – இல்லை<br>அ.சா.5 – 06.12.2022 / அ.சா.5 – 06.12.2022<br>அ.சா.6 – 06.12.2022 / அ.சா.6 – 06.12.2022<br>அ.சா.7 – 06.12.2022 / அ.சா.7 – 06.12.2022<br>அ.சா.8 – 06.12.2022 / அ.சா.8 – 06.12.2022<br>அ.சா.9 – 03.10.2024 / அ.சா.9 – 03.10.2024 |
| 18. | எதிரியிடம் பிரிவு 313(i)(b) Crpc/ 351(i)(b) BNSS படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 21.10.2024 |
| 19. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரி/குற்றமுறையிட்டாளார் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 22. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.6931/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 07.12.2023ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. |
| 23. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.சொக்கேசன் |

| | | | |
|---|---|---|---|
| 24. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு.R.ஜோதிமுருகன் |
| 25. | எதிரியின் கூற்று | : | எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 26. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 07.03.2026 |
| 27. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 07.03.2026 |
| 28. | நீதிபதியின் முடிவு | : | **முடிவாக எதிரி பிரிவுகள். 279, 337, 304(A) இதச படி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 248(1) குவிமுச—ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் குற்றம்சாட்டப்பட்டவர் எழுதி கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகும் என உத்தரவிடப்படுகிது.** |

இவ்வழக்கு 06.09.2021 தேதியன்று குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் (இனி கீழ் வரும் இடங்களில் **குவிமுச** என்று குறிப்பிடப்படும்) பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை—1 அவர்கள் ஆஜராகியும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஜோதிமுருகன் அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

1.**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**:

கடந்த 22.09.2019 ம் தேதி சுமார் 10.45 மணியளவில் புகார்தாரரும், மதுரைவீரன் மகன் சசிக்குமாரும், புகார்தாரரின் இருசக்கர வாகனமான TN 65 U 3682 Suzuki—ல்

புகார்தாரர் தலைக்கவசம் அணிந்து ஓட்ட புகார்தாரருக்கு பின்னால் உட்கார்ந்திருந்த சசிக்குமார் தலைக்கவசம் அணியாமலும் இருசக்கர வாகனத்தை இராமேஸ்வரம் to மதுரை NH 87 தேசியநெடுஞ்சாலையில் மண்டபம் நடுமனைக்காடு அருகே மேற்கிலிருந்து கிழக்கு நேக்கி வரும்போது, புகார்தாரருக்கு எதிரே கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி NH 87 ரோட்டில் TN 60 Q 5954 Toyato Etios நான்கு சக்கர வாகனத்தை எதிரி மணிகண்டன் அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று புகார்தாரரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் புகார்தாரரும், சசிகுமாரும் நிலைத்தடுமாறி ரோட்டில் கீழே விழுந்ததில் புகார்தாரருக்கு வலது பக்க தோள்பட்டை, வலது பக்க முழங்கால் மற்றும் வலது பக்க தலைப்பகுதியில் இரத்தக்காயம் மற்றும் சிராய்ப்பு காயம் ஏற்படுத்தியும், புகார்தாரருக்கு பின்னால் தலைக்கவசம் அணியாமல் உட்கார்ந்திருந்த சசிக்குமாருக்கு வலது பக்க தலைப்பகுதியில் இரத்த காயம் ஏற்படுத்தி இறப்பை ஏற்படுத்தியதாக பிரிவு 279, 337, 304(A) இதச படி மண்டபம் காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு பிரிவு 204 குவிமுச கீழ் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில் குற்றம் சாட்டப்பட்டவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம் சாட்டப்பட்டவருக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு குற்றம் சாட்டப்பட்டவர் மீது பிரிவு 251 குவிமுச படி பிரிவு 279, 337, 304(A) இதச படி குற்றச்சாட்டு குறித்து விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 242(1) குவிமுச கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர், அ.சா.2 முதல் அ.சா.6 வரையானவர்கள் சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சிகள், அ.சா.7 மற்றும் அ.சா.8 பார்வை மகஜர் சாட்சிகள், அ.சா.9 புலன் விசாரணை அதிகாரி.

5. **அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:**

அ.சா.1 ஜெயமுருகன் தனது சாட்சியத்தில் தான் சேரந்தையில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருவதாகவும், எதிரி மணிகண்டனை தெரியும் எனவும், டோயோடா காரை ஓட்டி வந்ததாகவும், கடந்த 22.09.2019 ம் தேதி காலை சுமார் 10.45 மணியளவில் கடுக்காமலை அருகே அ.சா.1 க்கு சொந்தமான TN 65 U 3682 என்ற பதிவெண் கொண்டு இரு சக்கர வாகனத்தை அ.சா.1 ஓட்ட சசிக்குமார் உடன் அமர்ந்து வந்ததாகவும், தாங்கள் மேற்கில் இருந்து கிழக்காக ரோட்டில் இடது பக்கதில் வந்த கொண்டிருந்த போது தங்களுக்கு எதிர் திசையான கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி டோயோடா காரை ஆஜர் எதிரி ஸ்பீடாக ஓட்டி வந்து தங்களது இரு சக்கர வாகனத்தில் மோதிவிட்டதாகவும், அ.சா.1 சாலையின் இடது பக்கமும், சசிக்குமார் என்பவர் வலது பக்கமும் விழுந்து விட்டதாகவும், தனக்கு தலை, வலது தோள் பட்டை, வலது காலில் அடிபட்டு, முழுவதுமாக சிராய்ப்பு காயங்கள் இருந்ததாகவும், சசிக்குமாருக்கு தலை நசுங்கி 108 ஆம்புலன்ஸ் மூலம் தங்கள் இருவரையும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாகவும், சசிக்குமாரை பரிசோதித்த மருத்துவர் அவர் இறந்து விட்டதாக கூறியதாகவும், அ.சா.1 ஒரு மாதம் உள்நோயாளியாக சிசிக்சையில் இருந்ததாகவும், அ.சா.1 மருத்துவமனையில் சிசிக்கையில் இருந்தபோது மண்டபம் போலீசார் அங்கு வந்து புகார் மனு வாங்கியதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்ததுதான் எனவும், அந்த புகார் மனு அ.சா.ஆ.1 எனவும், போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 முத்துமாரி தனது சாட்சியத்தில் தான் சேராந்தையில் வசித்து வந்து மருத்துவமனையில் கூலி வேலை பார்த்து வருவதாகவும், இந்த வழக்கின் இறந்து போன சசிக்குமார் அ.சா.1 கணவர் எனவும், கடந்த 22.09.2019ம் தேதி காலை 11 மணிக்கு தங்கள் ஊரை சேர்ந்த கனி என்பவருக்கு போன் மூலம் தகவல் வந்து அதைகேட்டு கனி தன்னிடம் சசிகுமார் யார் என்று கேட்டதற்கு தனது கணவர் என்று சொன்னதாகவும், எத்தனை சசிகுமார் இருக்கிறார், அ.சா.1 கணவர் சசிகுமார் வேலைக்கு சென்ற இடத்தில் விபத்து ஏற்பட்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னதன்பேரில் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது அ.சா.2 கணவர் இறந்துவிட்டதாக சொல்லி மூடி வைத்திருந்ததாகவும், ஆம்புலன்ஸ் ஓட்டுனர் அ.சா.2 கணவரை புகைப்படத்தை காட்டியதாகவும், அதில் அ.சா.2 கணவரின் தலை நசங்கி கண்கள் வெளியே தெரிந்ததாகவும், விபத்திற்கு முன்பாக அ.சா.2 கணவர் வேலைக்கு செல்வதற்காக அ.சா.1 உடன் காலை 8 மணிக்கு சென்றதாகவும், தன் கணவரின் உடம்பை நல்லடக்கம் செய்ய தந்தபோது தன்னிடம் கையொப்பம் வாங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 பிரபு தனது சாட்சியத்தில், தான் அபிராமத்தில் வசித்து வந்து ஆட்டோ ஓட்டுநராக பணிசெய்து வருவதாகவும், அ.சா.1 ஐ தான் பார்த்தது இல்லை எனவும், மணிகண்டனை தெரியாது எனவும், இந்த வழக்கில் இறந்து போன சசிகுமார் அ.சா.3 உடன்பிறந்த அண்ணன் எனவும், கடந்த 22.09.2019ம் தேதி காலை 11.30 மணியளவில் அ.சா.2 போன் மூலம் தன்னிடம் தனது அண்ணன் சசிகுமார் வேலைக்கு சென்ற இடத்தில் இருசக்கர வாகனத்தில் விபத்து ஏற்பட்டதாக கூறியதாகவும், அதன் பெயரில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று பார்த்த போது அவர் இறந்துவிட்டதாகவும், விபத்து பற்றி எந் விபரம் தனக்கு தெரியாது எனவும், போலீசார் தன்னை விசாரித்தாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 கனி தனது சாட்சியத்தில் தான் சேராந்தையில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருவதாகவும், அ.சா.1 ஐ தெரியும் எனவும், மணிகண்டனை தெரியாது எனவும், இறந்து போன சசிகுமாரை தெரியும் எனவும், கடந்த 22.09.2019 ம் தேதி காலை சுமார் 11 மணியளவில் மண்டபத்தில் இருந்து ஒரு நபர் போன் மூலம் சொல்லி தனது பெரியப்பா மகன் சத்தி என்பவர் தனக்கு தகவல் சொன்னதாகவும், அவர் போனில் தன்னிடம் நமது ஊரைச் சேர்ந்த இரண்டு நபர்களான சசிகுமார் மற்றும், ஜெயமுருகன் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் சென்று விபத்து எற்பட்டு ஒரு நபர் இறந்து விட்டதாகவும் மற்றொருவர் அரசு மருத்துவமனையில் இருப்பதாக தகவல் சொன்னதாகவும், அவரை அ.சா.4 மருத்துவமனையில் சென்று பார்த்ததாகவும், சசிகுமாரை பார்க்கமுடியவில்லை உள்ளே கொண்டு சென்றுவிட்டதாகவும், ஜெயமுருகனை பார்த்த போது கையில் தோள் பட்டையில் காயம் இருந்ததாகவும், தாங்கள் அங்கிருந்தவர்களை விசாரித்த போது இவர்கள் இருசக்கர வாகனத்தில் சென்றபோது வண்டியில் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.5 முனியசாமி தனது சாட்சியத்தில் தான் சேராந்தையில் வசித்து விவசாயம் செய்து வருவதாகவும், அ.சா.1 ஐ தெரியும் எனவும், ஆஜர் எதிரியை தான் பார்த்தது இல்லை எனவும், கடந்த 22.09.2019 ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் சசிகுமாரும், ஜெயமுருகனும் கொத்தனார் வேலைக்காக இருசக்கர வாகனத்தில் சென்றபோது இராமேஸ்வரத்தில் இருந்து மேற்கு நோக்கி சென்ற வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்த நபர் ஒருவர் போன் மூலம் தகவல் சொன்னதன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், அங்கு காயம்பட்ட சசிகுமாரை பார்த்தபோது அவருக்கு பின் பக்க தலையிலும், வலது காலிலும், இரத்தக் காயம் இருந்ததாகவும், பின்னர் அவர்களை ஆம்புலன்சில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாகவும், பின்னர் மருத்துவமனை சென்ற 10 நிமிடத்தில் சசிகுமார்

இறந்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.6 சுந்தரம் தனது சாட்சியத்தில் தான் சேராந்தையில் வசித்து விவசாயம் செய்து வருவதாகவும், அ.சா.1 ஐ தெரியும் எனவும், கடந்த 22.09.2019 ம் தேதி மதியம் 1 மணிக்கு கனி என்பவர் தனக்கு போன் செய்து சசிகுமார் என்பவர் வண்டியில் அடிபட்டுவிட்டதாக தகவல் சொன்னதன் பேரில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று பார்த்ததாகவும், அ.சா.6 பார்த்த போது சசிகுமார் இறந்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.7 சதாசிவம் தனது சாட்சியத்தில் தான் சேராந்தையில் மீன் வியாபாரம் செய்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது எனவும், அது அ.சா.ஆ.2 எனவும், கடந்த 22.09.2019 ம் தேதி அ.சா.7 மீன் வாங்கிக்கொண்டு சென்றபோது விபத்து நடந்த இடத்தில் போலீசார் வந்து படம் வரைந்து விசாரித்துக்கொண்டிருந்தபோது சாட்சியாக கையெழுத்து கேட்டதன் பேரில் தான் கையெழுத்து செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.8 தர்மராஜ் தனது சாட்சியத்தில் தான் சேராந்தையில் வசித்து விவசாயம் மற்றும் மீன் வியாபாரம் செய்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், அது அ.சா.ஆ.2 எனவும், 2019 ம் வருடம் ஒருநாள் விபத்து நடந்த இடத்தில் போலீசார் வந்து படம் வரைந்து விசாரித்துக்கொண்டிருந்தபோது சாட்சியாக கையெழுத்து கேட்டதன் பேரில் தான் கையெழுத்து செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.9 மாயா ராஜலட்சுமி தனது சாட்சியத்தில் தான் தற்போது தேனி மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந் வருவதாகவும், கடந்த 22.09.2019 ம் தேதி

மண்டபம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது சார்பு ஆய்வாளர் சிராஜ்தீன் அவர்கள் பதிவு செய்த குற்ற எண். 154/2019, பிரிவுகள்.279, 337, 304(A) இதச வழக்கின் வழக்கு கோப்பை பார்வையிட்டதாகவும், அன்றைய தினமே 13.30 மணிக்கு சம்பவ இடத்தில் சாட்சிகள் சதாசிவம், தர்மராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 எனவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 எனவும், சம்பவ சாட்சிகள் ஜெயமுருகன், முத்துமாரி, பிரபு, முனியசாமி, சுந்தரம், சதாசிவம், தர்மராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 22.09.2019 ம் தேதி 14.30 மணி முதல் 15.45 மணி வரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனை பிரேத வைப்பறையில் வைக்கப்பட்டிருந்த இறந்த நபர் சசிக்குமார் என்பவரின் பிரேதத்தை விசாரித்து பிரேத விசாரணை செய்ததாகவும், அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 எனவும், மேலும் 636 மலைச்சாமி என்பவர் மூலம் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்ததாகவும், பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றதாகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 எனவும், 22.09.2019 ம் தேதி சுமார் 18.00 மணியளவில் மண்டபம் வலையர்வாடி பஸ்ஸ்டாப் அருகில் வைத்து இவ்வழக்கின் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்துநிலையப் பிணையில் விடுவித்ததாகவும், 23.09.2019 ம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனமான TN 60 Q 5959 வாகனத்தையும், 03.10.2019 ம் தேதி TN 65 Q 3682 என்ற இருசக்கர வாகனத்தையும் ஆய்வுக்காக இராமநாதபுரம் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் அனுப்பி வைத்து அறிக்கை பெற்றதாகவும், அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.9, 10 எனவும், அதன்பின்பு காயம்பட்ட ஜெயமுருகன் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் தினேஷ்முகில் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு பெற்றதாகவும், அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.11 எனவும், இறுதியாக தனது விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள்.279, 337, 304(A) இதச

படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

## Questioning U/s.351(i)(b) BNSS

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக உள்ளவை குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டு என்று கூறினார். ஆனால், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் இந்த வழக்கில் எந்தவொரு சாட்சியும் விசாரிக்கவில்லை.

## Point for determination

**7. இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 279, 337, 304(A) படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

## இருதரப்பு வாதங்கள்

8. அரசுத்தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் அ.சா.1 சம்பவம் குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதாகவும், அதனை ஆதரித்து அ.சா.2 முதல் அ.சா.9 வரையானவர்கள் சாட்சியம் அளித்துள்ளதாவும். மேற்சொன்னவர்கள் மூலம் வழக்கு சம்பவம் தொடர்பாக அரசுத்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக வாதம் சமர்பிக்கப்பட்டது.

9. குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1 விபத்து ஏற்பட்ட விதம் மற்றும் தனக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பாக போலீசார் விசாரணை வாக்குமூலத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளதாகவும், அ.சா.2 முதல் அ.சா.8 வரையானவர்கள் இவ்வழக்கில் அ.சா.1 க்கு உறவினர்கள் என்பதாலும், அவர்கள் இவ்வழக்கில் ஆதாயம் அடையும் சாட்சிகள் என்று வாதிடப்பட்டது. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட புலன்விசாரணை அதிகாரியான அ.சா.9 மாயராஜலெட்சுமி என்பவர் தனது குறுக்கு விசாரணையில் சம்பவ இடத்தில் கண்ணுற்ற சாட்சிகளோ அல்லது அக்கம், பக்கம் சாட்சிகளோ வழக்கில் சேர்க்கப்படவில்லை என்று சாட்சியமளித்துள்ளதன் மூலமாக சம்பவத்தை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று வாதிடப்பட்டது. மேலும் அ.சா.9 இவ்வழக்கின் புகாரானது யாரால் எழுதப்பட்டது என்று தெரியாது என்று சாட்சியமளித்துள்ளதன் மூலமாக அ.சா.1 குறுக்கு விசாரணையின் முன்னிட்டது போல் புகாரானது ஏட்டையாவால் எழுதப்பட்டது என்பது அரசுத்தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. மேற்சொன்ன முரண்பாடுகள் மற்றும் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிடப்பட்டது. மேலும் எதிரிகள் தரப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் கீழ்க்கண்ட முன் தீர்ப்புகள் சமர்ப்பிக்கப்பட்டது.

**i) (2022) 2 MLJ (Crl) 527 --** No independent witnesses examined from scene of occurrence – Accident happended in public road, junction of signal point – PW1 and PW2 as well as Investigating Officer admit that accident spot was main road busy with public movement at plying of vehicle.

**ii) (2021) 4 MLJ (Crl) 311 --** PW11/Investigation Officer stated in his cross examination that there was speed-breaker on northern side twenty feet away from occurrence – If said evidence was found correct, at time of crossing speed breaker, driver of lorry would slow down vehicle and

then only attempted to cross same – No possibility for petitioner to drive his vehicle in high speed.

**iii) (2021) 4 MLJ (Crl) 475 --** No persons nearby place of occurence examined on side of prosecution – They were material witnesses to speak about occurrence – Non-examination of material witnesses was fatal to prosecution.

No evidence of rash and negilgent driving on part of accused – Prosecution witnesses had not stated that accident occurred due to rash and negligent driving of accused – Prosecution had not proved case beyond reasonable doubt – Revision allowed.

**iv) Crl.R.C.No.424 of 2015 Para 6 --** Driving a vehicle in a high speed per se is not an inference for rash or negligent driving. There must be evidence to show by driving the vehile at hight speed it likely to endanger the human life.

**Appreciation of Evidence**

10. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சியாக முன்னிடப்பட்ட புகார்தாரர் அ.சா.1 ஜெயமுருகன் தனது சாட்சியத்தில் 22.09.2019 ம் தேதி காலை 10.45 மணியளவில் தானும், சசிக்குமார் என்பவரும் TN 65 U 3682 என்ற இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்காக ரோட்டின் இடது பக்கத்தில் எதிர்திசையில் Toyota காரை ஆஜர் எதிரி ஸ்பீடாக ஓட்டி வந்து தங்களது இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டதாக சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.2 முத்துமாரி, அ.சா.3 பிரபு, அ.சா.4 கனி, அ.சா.5 முனியசாமி, அ.சா.6 சுந்தரம் ஆகியோர் சம்பவத்தை பொறுத்து கேள்வியுற்ற சாட்சிகள் என்பதும், சம்பவம் நடைபெற்ற பிறகு தொடர்ச்சியாக நடைபெற்ற சங்கதிகள் தொடர்பாக சாட்சியமளித்துள்ளது தெரிய வருகிறது. எனவே, இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பான சம்பவத்தைப் பொறுத்து

அ.சா.1ன் சாட்சியத்தை கவனத்துடன் பரிசீலிக்க வேண்டிய அவசியம் உண்டாகிறது.

11. அ.சா.1 தனது சாட்சியத்தில் தாங்கள் இருசக்கர வாகனத்தில் ரோட்டின் இடது புறம் சென்றபோது எதிரி ஸ்பீடாக காரை ஓட்டி வந்ததாக சாட்சியமளித்துள்ளார். விபத்து நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் குறித்து அரசுத்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று ஆராய்கையில் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தை பரிசீலனை செய்கையில் சம்பவ இடமானது மண்டபம் நடுமனைக்காடு அருகே NH 87 தேசிய நெடுஞ்சாலையில் மதுரை– இராமேஸ்வரம் செல்லும் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு செல்லும் சாலையின் மையப்பகுதியிலிருந்து இடது புறத்தில் அமையப்பெற்றுள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.7 சதாசிவம் மற்றும் அ.சா.8 தர்மராஜ் ஆகியோரும் பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தொடர்பாக தெளிவான சாட்சியங்கள் அளிக்காத நிலையில் மேற்சொன்ன சம்பவ இடமானது மண்டபம் நடுமனைக்காடு என்பது தகுந்த சாட்சியங்கள் மூலமாக இந்நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

12. மேலும், புலன்விசாரணை அதிகாரி அ.சா.9 சம்பவ இடத்தில் உள்ள சாட்சிகள் வழக்கில் சேர்க்கப்படவில்லையென்று சாட்சியமளித்துள்ளார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் எதிரி தரப்பில் முன்னிடப்பட்ட 2022 (2) MLJ(Crl) 527 என்ற முன்தீர்ப்பில் சுட்டிக்காட்டியது போல் சம்பவ இடமானது தொடர்ச்சியாக வாகனங்கள் செல்லும் போக்குவரத்து நிறைந்த பகுதியென்று அ.சா.9 சாட்சியமளித்துள்ள நிலையில் சம்பவ இட சாட்சிகள் சேர்க்கப்படாதது அரசுத்தரப்பு வழக்கை பாதிப்படையச் செய்வதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. அ.சா.1 தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரி ஸ்பீடாக ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டார் என்று சாட்சியமளித்துள்ளார். அவர் விபத்து எவ்வாறு

ஏற்பட்டது என்றோ, ஆஜர் எதிரி அஜாக்கிரதையாக கவனக்குறைவாக நான்கு சக்கர வாகனத்தை இயக்கி அதன் மூலம் விபத்து ஏற்பட்டதாக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை. எதிரி வேகமாக காரை ஓட்டினார் என்று அ.சா.1 சாட்சியம் மூலமாக எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு தொடர்பாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது. எதிரி தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட முன்தீர்ப்புகள் இவ்வழக்கு சங்கதிகளுடன் ஒத்துப்போகும் வகையில் அமையப்பெற்றுள்ளது. எனவே, எதிரி தரப்பில் முன்னிடப்பட்ட வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகிறது. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக அரசுத்தரப்பில் சாட்சிகள் முன்னிடப்படாத நிலையில் அ.சா.1 ன் சாட்சியமும் எதிரி மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் அமையப்பெறவில்லை. இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.9 மாயராஜலெட்சுமி என்பவர் சம்பவம் நடைபெற்ற பிறகு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக சாட்சியமளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியம் மூலமாக இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது.

14. எனவே, அ.சா.1 முதல் அ.சா.9 வரையான சாட்சியங்கள் மூலமாக கடந்த 22.09.2019 ம் தேதி சுமார் 10.45 மணியளவில் வாதியும், மதுரைவீரன் மகன் சசிக்குமாரும், வாதியின் இருசக்கர வாகனமான TN 65 U 3682 Suzuki–ல் வாதி தலைக்கவசம் அணிந்து ஓட்ட வாதிக்கு பின்னால் உட்கார்ந்திருந்த சசிக்குமார் தலைக்கவசம் அணியாமலும் இருசக்கர வாகனத்தை இராமேஸ்வரம் மதுரை NH 87 தேசியநெடுஞ்சாலையில் மண்டபம் நடுமனைக்காடு அருகே மேற்கிலிருந்து கிழக்கு நேக்கி வரும்போது, வாதிக்கு எதிரே கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி NH 87 ரோட்டில் TN60 Q 5954 Toyato Etios நான்கு சக்கர வாகனத்தை எதிரி மணிகண்டன் பொதுப்பாதையில் மற்றவருக்கு காயம் விளைவிக்கும் வகையில் அஜாக்கிரதையாக ஓட்டியதன் மூலமாக பிரிவு.279 இதசன் கீழும், அவ்வாறு அஜாக்கிரதையாக வாகனத்தை இயக்கி அ.சா.1 க்கு வாதிக்கு வலது பக்க தோள்பட்டை, வலது பக்க

முழங்கால் மற்றும் வலது பக்க தலைப்பகுதியில் இரத்தக்காயம் மற்றும் சிராய்ப்பு காயம் என சிறுகாயம் ஏற்படுத்தியதன் மூலமாக பிரிவு.337 இதசன் கீழும், அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று வாதியின் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் வாதியும், சசிகுமாரும் நிலைத்தடுமாறி ரோட்டில் கீழே விழுந்ததில் புகார்தாரரின் பின்னால் தலைகவசம் அணியாமல் உட்கார்ந்திருந்த சசிக்குமாருக்கு வலது பக்க தலைப்பகுதியில் இரத்தக்காயம் ஏற்படுத்தி இறப்பை ஏற்படுத்தியதன் மூலமாக பிரிவு.304(A) இதசன் கீழும் குற்றம்புரிந்ததாக தகுந்த சாட்சியங்கள் மூலம் அரசுத்தரப்பில் முன்னிடப்படாத சூழ்நிலையில் புலன் விசாரனை அதிகாரியான திருமதி.மாயராஜலெட்சுமி என்பவரது சாட்சியம் மூலமாக எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை புரிந்ததாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது. எனவே அரசுத்தரப்பில் எதிரி மீதான பிரிவு 279, 337, 304(A) இதசவின் கீழ் குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

15. முடிவாக குற்றம் சாட்டப்பட்டவர் பிரிவுகள் 279, 337, 304(A) இதசன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. குற்றம்சாட்டப்பட்டவர் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

16. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

17. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் 22.09.2019 ம் தேதி கைது செய்யப்பட்டு அன்றைய தினமே நிலைய பிணையில் சென்றுள்ளார்.

TNRM050004432021



இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.07 16:22:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

i) **அரசுத் தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | ஜெயமுருகன் |
| அ.சா.2 | – | முத்துமாரி |
| அ.சா.3 | – | பிரபு |
| அ.சா.4 | – | கனி |
| அ.சா.5 | – | முனியசாமி |
| அ.சா.6 | – | சுந்தரம் |
| அ.சா.7 | – | சதாசிவம் |
| அ.சா.8 | – | தர்மராஜ் |
| அ.சா.9 | – | மாயா ராஜலட்சுமி |

**(ii) அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 22.09.2019 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 22.09.2019 | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 22.09.2019 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 22.09.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 22.09.2019 | பார்வை மகஜர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6 | 22.09.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 22.09.2019 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 22.09.2019 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 12.12.2016 | TN 60 Q 5954 என்ற பதிவு எண் கொண்ட Toyoto வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.10 | 24.01.2017 | TN 65 U 3682 என்ற பதிவு எண் கொண்ட Suzuki இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.11 | 22.09.2019 | விபத்து பதிவேடு |

<u>Iii) குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

<u>iv) சான்றுப்பொருள்:</u>

இல்லை

<u>குறிப்பு:</u>

1. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கவில்லை.
2. குற்றம் சாட்டப்பட்டவர் பிணையில் இருந்தார்.
3. வழக்கு முடிவு பற்றி காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.07 16:22:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.